# பெரியோர் ஓய்வுநாட் பள்ளிப் பாடங்கள்

மூன்றாம் காலாண்டு, 2017

# கலாத்தியரில் நற்செய்தி


1. பவுல்: புறஜாதியாருக்கான அப்போஸ்தலன் (ஜூன் 24–30)..........6
2. பவுலின் அதிகாரமும் சுவிசேஷமும் (ஜூலை 1–7)..........14
3. சுவிசேஷ ஒருமைப்பாடு (ஜூலை 8–14)..........22
4. விசுவாசத்தினால்மாத்திரம் நீதிமானாக்கப்படுதல் (ஜூலை 15–21)..........30
5. பழைய ஏற்பாட்டு விசுவாசம் (ஜூலை 22–28)..........38
6. வாக்குத்தத்தத்தின் முன்னுரிமை (ஜூலை 29–ஆகஸ்ட் 4)..........46
7. விசுவாசத்திற்குச் செல்லும் பாதை (ஆகஸ்ட் 5–11)..........54
8. அடிமைமாறி சுதந்தரவாளியாதல் (ஆகஸ்ட் 12–18)..........62
9. போதகர் பவுலின் வேண்டுகோள் (ஆகஸ்ட் 19–25)..........70
10. இரண்டு உடன்படிக்கைகள் (ஆகஸ்ட் 26–செப்டம்பர் 1)..........78
11. கிறிஸ்துவில் கிடைக்கிற விடுதலை (செப்டம்பர் 2–8)..........86
12. ஆவியினாலே வாழுதல் (செப்டம்பர் 9–15)..........94
13. சுவிசேஷமும் சபையும் (செப்டம்பர் 16–22)..........102
14. சிலுவையைக் குறித்து மேன்மைபாராட்டுதல் (செப்டம்பர் 23–29)..........110



பாட ஆசிரியர்கள்

முனைவர் கார்ல் கொஸெர்ட்

தமிழாக்கம்

மார்சல் ஐசக்



தென்கிழக்கு இந்திய ஒன்றியம்

செவந்த்–டே அட்வென்ட்டிஸ்ட் திருச்சபை

197, ஜீ. எஸ். டி. சாலை, வண்டலூர், சென்னை – 600 048



# மார்டின் லூதரும் கலாத்தியரும்

புரொட்டஸ்டண்ட் சீர்திருத்தத்தின் ஐநூறாவது ஆண்டுவிழாவைக் கொண்டாட புரொட்டஸ்டண்ட் உலகம் ஆயத்தமாகி வருகிறது. அன்று, பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட்ட மார்டின் லூதர், பல நூற்றாண்டுகளாக மூடநம்பிக்கையாலும் பாரம் பரியத்தாலும் மறைக்கப்பட்டிருந்த முக்கியமான வேதாகம சத்தியங்களை லட்சக்கணக் கான மக்கள் கண்டுகொள்ளும்படிச் செய்தார். ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பு புரொட்டஸ் டண்ட் மார்க்கம் தோன்றியதற்கு கலாத்தியர் நிருபம்தான் (ரோமர் நிருபத்தையும் சேர்க் கலாம்) காரணம் என்று சொல்லமுடியும்! கலாத்தியர் நிருபத்தை வாசித்துக் கொண்டிருந்த போதுதான், விசுவாசத்தால் நீதிமானாகுதல் என்கிற மகத்தான நற்செய்தி மார்டின் லூத ரைத் தொட்டது; இந்த உன்னதமான சத்தியம்தான் புரொட்டஸ்டண்ட் சீர்திருத்தத்திற்கு வித்திட்டது; அதனால், பல நூற்றாண்டுகளாக நிலவிவந்த வேதாகம கருத்து மாறுபாட்டி லிருந்தும், சபையின் கருத்துமாறுபாட்டிலிருந்தும் லட்சக்கணக்கானோர் விடுதலையடைந் தார்கள். கலாத்தியரில் வாசித்த விஷயங்கள் மார்ட்டின் லூதரை மாற்றின; உலகத்திலும் அவை பெரும் மாற்றத்தை உண்டுபண்ணின.

மார்டின் லூதருக்கு பல நூற்றாண்டுகள் கழித்து, செவந்த்ட்-டே அட்வென்டடிஸ்டு களும் கலாத்தியர் நிருபத்திற்கு அதிகம் நன்றிகடன்பட்டிருக்கிறார்கள். 1890 மற்றும் 1890 -களின் அட்வென்ட்டிஸ்ட் சபையானது, விசுவாசத்தால் நீதிமானுகுதல் என்கிற சத்தி யத்தை மீண்டும் கண்டுகொள்வதற்கு கலாத்தியர் நிருபம்தான் உதவியது; இ.ஜே. வேகனர் என்பவரும், ஏ.டி. ஜோன்ஸ் என்பவரும் அதற்கு கருவிகளாக இருந்தார்கள்.

புரொட்டஸ்டண்ட் சீர்திருத்தத்தின் முதுகெலும்பாக விளங்கும் அளவிற்கு காலத் தியர் நிருபத்தில் என்ன இருக்கிறது? லூதரைத் தொட்டதுபோல, அநேகரின் இருதயங் களைத் தொடுவதற்கு அதால் எவ்வாறு முடிந்தது? வேதாகமத்தின் மற்ற புத்தகங்கள் சொல்லாத ஒரு விதத்தில், கிறிஸ்தவ வாழ்க்கைக்கு உறுதுணையாக இருக்கும் பல கருத்து களை கலாத்தியர் கூறுகிறது. விடுதலை, இரட்சிப்பில் பிரமாணத்தின் பங்கு, கிறிஸ்து வில் நம்முடைய நிலை, ஆவியால் நடத்தப்படுகிற வாழ்க்கையின் தன்மை போன்ற விஷயங்களுக்கும், 'பரிசுத்தமும் நீதியும் உள்ள ஒரு தேவனுக்கு முன்பாக பாவ மனிதர்கள் எவ்வாறு நீதிமான்களாக முடியும்?' என்று காலம்காலமாகக் கேட்கப்பட்டு வருகிற ஒரு கேள்விக்கும் கலாத்தியரில்தான் பவுல் பதிலளிக்கிறார். மற்ற கேள்விகள் அனைத்தை யும்விட அதிகமாக இந்தக் கேள்விதான், லூதர் கண்டுகொண்ட புதிய பாதையில் அவரை விரைந்து செல்ல வைத்தது; அந்த வழியிலிருந்து அதன்பிறகு அவர் பின்வாங்கவே இல்லை.

ரோமர் நிருபம் போன்ற புத்தகங்களும் இதே கேள்விகள் சிலவற்றை அலசி ஆராய்கின்றன; ஆனாலும் கலாத்தியர் நிருபம் வித்தியாசமானது. சொல்லவேண்டிய கருத்தை மிகத் தெளிவாகச் சொல்கிறது. அதுமாத்திரமல்ல, ஒரு போதகராக தனிப்பட்ட விதத்திலும் உணர்ச்சிப்பூர்வமாகவும் அழைப்பு கொடுப்பதுபோல, உன்னதமான கருத்துகளை மிக வல்லமையாகக் கூறுகிறார். அதனால்தான், தேவனுடைய ஆவியானவருக்கு திறக்கப்பட் டிருக்கிற இருதயங்களை இன்றும்கூட அவை தொடுகின்றன.

பவுலின் நிருபங்கள் தனிப்பட்ட விதத்தில் நம்மோடு பேசுகின்றன என்பது உண்மைதான்; ஆனால், பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலின்கீழ், பவுல் அவற்றைக் கூறினபோது இருந்த வரலாற்றுச் சூழலை அறிந்திருந்தால்தான், நம்முடைய புரிந்துகொள்ளுதலும் பலமானதாக இருக்கும்.

பவுல் தன் நிருபங்களில் கலாத்தியர் நிருபத்தைதான் முதலில் எழுதியிருப்பார் என்றும், பிரபலமாகப் பேசப்படும் எருசலேமில் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்திற்கு பிறகு (அப் 15), கி.பி. 49 இல் அதை எழுதியிருப்பாரென்றும் வேத அறிஞர்கள் பலர் கருதுகிறார்கள். ஆகவே, மக்கள் அறிந்த முதல் கிறிஸ்தவ ஆவணமாக கலாத்தியர் நிருபம் இருந்திருக்கலாம். “இரட்சிப்பு எவ்வாறு கிடைக்கிறது, அதிலும் புறஜாதியார் எவ்வாறு இரட்சிக்கப்படுகிறார்கள்” என்பது குறித்து ஆதிகாலச் சபையில் கடும் வாக்குவாதம் உண்டாயிற்று. யூதயேர் என அழைக்கப்பட்ட ஒரு கூட்ட யூத விசுவாசிகள் இருந்தார்கள்; புறஜாதியார் இயேசுவை விசுவாசிப்பதுமாத்திரம் போதாது என்று அவர்கள் கூறினார்கள். பிற இனத்தவர்களும் விருத்தசேதனம் செய்து, மோசேயின் பிரமாணத்தைக் கைக்கொள்ளவேண்டும் என்றார்கள். (அப் 15:1). அதனால்தான், கலாத்தியாவில் புறஜாதியாருக்காக பவுல் ஒரு சபையை நிறுவியபோது, இந்த யூதேயர்களில் சிலர் ‘பிரச்சனையைச் சரிசெய்யும்படி’ அங்குச் செல்வதற்குக் கிளம்பினார்கள்.

**இந்தப் பொய்ச் சுவிசேஷமானது கிறிஸ்துவின் பணியைக் கெடுத்துவிடுமென உணர்ந்தார்; மெய்யான நற்செய்தியை வலியுறுத்தி, உணர்ச்சிப்பூர்வமான விதத்தில் கலாத்தியருக்கு எழுதினார்.**

இந்த விஷயம் பவுலுக்கு எட்டியபோது, கடும் கோபங்கொண்டார். விசுவாசத்தையும் கிரியையையும் அடிப்படையாகவைத்து இரட்சிப்பு கிடைக்கிறது என்கிற இந்தப் பொய்ச் சுவிசேஷமானது கிறிஸ்துவின் பணியைக் கெடுத்துவிடும் என்று உணர்ந்தார்; மெய்யான நற்செய்தியை வலியுறுத்தி, உணர்ச்சிப்பூர்வமான விதத்தில் கலாத்தியருக்கு எழுதினார். இந்தப் பொய்ச்சுவிசேஷமானது கிரியைத்துவமே அன்றி வேறில்லை என்று கடுமைமிக்க வார்த்தைகளால் சாடுகிறார்.

இயேசுவுக்கு உண்மையாக இருக்கும்படி கலாத்தியரிடம் பவுல் மன்றாடினதுதான் இந்தக் காலாண்டின் பாடம்; அந்த வேண்டுகோளை அவர் நமக்கும் வைக்கிறார். அதே சமயம், ரோமோடான உறவை நிரந்தரமாக முறிக்கவும், வேதாகம சுவிசேஷத்தை வெளிச்சப்படுத்தவும் லூதருக்கு உறுதுணையாக இருந்த சத்தியங்களை நாம் எவ்வாறு அறிந்திருக்கிறோம் என்பதை ஆராய்வதற்கும் நமக்கு இது ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது.

*இக்காலாண்டின் பாட ஆசிரியர் முனைவர் கார்ல் கோஸெர்ட். இவர் வாஷிங்டனின் காலேஜ் ப்ளேசிலுள்ள வாலாவாலா பல்கலைக்கழகத்தில், ‘புதிய ஏற்பாடும் ஆதிக் கிறிஸ்துவமும்’ எனும் பாடத்துறையில் இணைப்பேராசிரியராகப் பணியாற்றுகிறார்.*

# மனன வசனங்கள்

1 இவைகளை அவர்கள் கேட்டபொழுது அமர்ந்திருந்து, ''அப்படியானால் ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலைத் தேவன் புறஜாதியாருக்கும் அருளிச்செய்தார்'' என்று சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள். அப் 11:18.

2 இப்பொழுது நான் மனுஷரையா, தேவனையா, யாரை நாடிப்போதிக்கிறேன்? மனுஷரையா பிரியப்படுத்தப்பார்க்கிறேன்? நான் இன்னும் மனுஷரைப்பிரியப்படுத்துகிறவனாயிருந்தால் நான் கிறிஸ்துவின் ஊழியக்காரனல்லவே. கலா 1:10.

3 நீங்கள் ஏக சிந்தையும் ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள். பிலி 2:2.

4 கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைதாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன். கலா 2:20.

5 மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கிமீட்டுக் கொண்டார். கலா 3:13.

6 அன்றியும், சுதந்தரமானது நியாயப்பிரமாணத்தினாலே உண்டானால் அது வாக்குத்தத்தத்தினாலே உண்டாயிராது; தேவன் அதை ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தத்தினாலே அருளிச்செய்தாரே. கலா 3:18.

7 இயேசுகிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கிற வாக்குத்தத்தம் விசுவாசமுள்ளவர்களுக்கு அளிக்கும்படி வேதம் எல்லாரையும் ஏகமாய்ப் பாவத்தின்கீழ் அடைத்துப்போட்டது. கலா 3:22.

8 இனி நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய்; நீ புத்திரனேயானால், கிறிஸ்துமூலமாய்த் தேவனுடைய சுதந்தரனாயுமிருக்கிறாய். கலா 4:7.

9 சகோதரரே, என்னைப் போலாகுங்கள் என்று உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; நான் உங்களைப் போலுமானேனே. கலா 4:12.

10 மேலான எருசலேமோ சுயாதீனமுள்ளவள், அவளே நம்மெல்லாருக்கும் தாயானவள். கலா 4:26.

11 சகோதரரே, நீங்கள் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டீர்கள், இந்தச் சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாக அநுசரியாமல், அன்பினால் ஒருவருக்கொருவர் ஊழியஞ் செய்யுங்கள். கலா 5:13.

12 நான் சொல்லுகிறதென்னவென்றால், ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள். கலா 5:16.

13 ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விஷேமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மைசெய்யக்கடவோம். கலா 6:10.

14 நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங் குறித்து மேன்மைபாராட்டாதிருப்பேனாக; அவரால் உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன். கலா 6:14.